# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.

**ஆணை நாள்.12.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 11860/B/2023**

திரு. K. ஸ்ரீதர் ... மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொது தகவல் அலுவலர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
திருச்சி-620001. ... பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின்மீது இவ்வாணையத்தால் (02.06.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து மனுதாரர் திரு. K. ஸ்ரீதர் அவர்கள் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திரு.M.கிறிஸ்டோபர், முதன்மை மாவட்ட நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்களின் பிரதிநிதியாக திரு. S. பாலாஜி, தலைமை நிர்வாக அதிகாரி, முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருச்சி மாவட்டம் அவர்கள் (12.06.2026) இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்கள்.

2. ஆஜரான பொது தகவல் அலுவலர் அவர்கள், (Memo No.4063/A1/24, dated.09.06.2026) ஸ்ரீரங்கம் தாசில்தாருக்கு மேலே குறிப்பிட்ட வழக்கில் உள்ள அசல் ஆவணங்களை மீண்டும் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டதாகவும், அதன்படி, ஸ்ரீரங்கம் தாசில்தார் தனது அறிக்கை எண்.15626 மூலம், அந்த கோப்பு ஸ்ரீரங்கம் தாலுகா அலுவலகத்தில் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளதாகவும், 1996-ஆம் ஆண்டில் திருச்சி ஒருங்கிணைந்த தாலுகாவிலிருந்து ஸ்ரீரங்கம் தாலுகா தனியாக பிரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, Memo No.4105/26/A1, dated.10.06.2026 மூலம் நில அளவை மற்றும் நில பதிவுத்துறை (Land Records Department) உதவி இயக்குநரிடம் அசல் பதிவுகளைத் தேடி கண்டறியுமாறு கோரப்பட்டுள்ளதாகவும், அதற்கான அறிக்கை இன்னும் வரவில்லை. எனவே, மேற்கண்ட சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அறிக்கை தாக்கல் செய்ய தேவையான கால அவகாசம் வழங்குமாறும், ஆணையத்திடம் கேட்டுக்கொண்டார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

ஆஜரான பொது தகவல் அலுவலர் அவர்கள் தீர்ப்பாணை (decree) யினை மறு உருவாக்கம் செய்வதற்காக ஒருமாதம் அவகாசம் தேவை என ஆணையத்திடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க, இவ்வழக்கின் விசாரணை வருகின்ற **30.07.2026** **அன்று**

**முற்பகல் 11.00 மணிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. 30.07.2026 அன்று நடைபெறவிருக்கும் விசாரணைக்கு மனுதாரர்** மற்றும் **பொது தகவல் அலுவலர்** ஆணையத்திற்கு நேரில் ஆஜராக உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 11860/B/2023**

**பெறுநர்**

1. பொது தகவல் அலுவலர்,
   முதன்மை மாவட்ட நீதிபதி,
   முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
   திருச்சி-620001.

2. மேல்முறையீட்டாளர்,
   திரு. K. ஸ்ரீதர்,
   எண்.23, பகவதி அம்மன் கோவில் தெரு,
   ஸ்ரீரங்கம்,
   திருச்சிராப்பள்ளி-620006.
   செல்.9360712373.

Copy to: File. GP PC
120626